மனித உரிமைகள் மற்றும் சூரியப் புவிப்பொறியியல் பற்றிய அறிமுகம்

மனித உரிமைகள் என்றால் என்ன?

மனித உரிமைகள் என்பவை ஒவ்வொரு நபரும் ஒரு தனிநபராக இருப்பதனாலேயே இயல்பாகக் கொண்டிருக்கும் உரிமைகள் ஆகும். அவை முழு உலகத்துக்கும் பொதுவானவை ஆகும். அதாவது, தேசிய இனம், பால், தேசிய ரீதியான அல்லது இன ரீதியான தோற்றம், இனம், மதம் அல்லது வேறு எந்தவொரு அந்தஸ்தையும் பொருட்படுத்தாது உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு மனிதருக்கும் பாகுபாடின்றிப் பொருந்தக்கூடியனவாகும். மேலும் மனித உரிமைகள் அந்நியப்படுத்த முடியாதவை ஆகும். அதாவது, அவற்றைப் பறித்தெடுக்க முடியாது. மேலும் அவை பிரிக்க முடியாதனவாகவும் ஒன்றிலொன்று தங்கியிருப்பனவாகவும் உள்ளனதனால் ஓர் உரிமையை மீறுவது பெரும்பாலும் ஏனைய உரிமைகளையும் பாதிப்பதாக அமையும்.



மனித உரிமைகள் எங்கிருந்து வருகின்றன?

மனித உரிமைகள் என்பது மனித உயிர்கள் மனிதப்பிறப்பாக இருப்பதனாலேயே இயல்பான கண்ணியத்தைக் கொண்டுள்ளனர் என்ற தத்துவார்த்த சிந்தனையிலிருந்து தோற்றம் பெற்றதாகும். மனித உரிமைகள் பற்றிய நமது தற்போதைய புரிதலானது, 1948 ஆம் ஆண்டில் ஐ.நா பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகளுக்கான ஐ.நா பிரகடனத்தில் (UDHR) இருந்து பெறப்பட்டதாகும். இந்த ஆவணம் உலகம் முழுவதிலும் உள்ள மனித உரிமை ஒப்பந்தங்கள் மற்றும் சட்டங்களுக்கு ஊக்கமளித்துள்ளது, அவற்றில் பல அரசாங்கங்கள் மனித உரிமைகளை மதிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் சட்டபூர்வ கடப்பாடுகளை உருவாக்குகின்றன. UDHR, சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (ICCPR) மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (ICESCR) ஆகியவற்றுடன் இணைந்து கூட்டாக சர்வதேச மனித உரிமைகள் வரைவு என அழைக்கப்படுகிறது. சர்வதேச மட்டத்தில் மனித உரிமைகளை மேம்படுத்துவதும் பாதுகாப்பதும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் (OHCHR) பொறுப்பாகும். இது தவிர ஐரோப்பிய ஒன்றியம், ஐரோப்பிய பேரவை, ஆபிரிக்க ஒன்றியம் மற்றும் அமெரிக்க நாடுகளின் அமைப்பு உள்ளிட்ட ஏனைய சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புகளும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் ஆதரவளிக்கின்றன.

மனித உரிமைகள் மற்றும் சூரிய கதிர்வீச்சு மாற்றமைவு

சூரிய புவிப்பொறியியல் (சூரிய கதிர்வீச்சு மாற்றம் அல்லது SRM எனவும் அறியப்படுகிறது) மனித உரிமைகளில் நேர்ப்பாங்கான மற்றும் எதிர்மறையான பல வழிகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது. ஒருபுறம், காலநிலை மாற்றம் மற்றும் சுற்றாடல் சீரழிவின் தாக்கங்கள் இன்றைய மற்றும் எதிர்கால தலைமுறையினருக்கு மனித உரிமைகளை (உ-ம்: வாழ்வதற்கான உரிமை, உணவுக்காப்பு, சுகாதாரம்) அனுபவிப்பதில் பேரழிவை ஏற்படுத்துகின்றன. எனவே, காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய பாதிப்புகளைக் குறைப்பதற்கு சூரிய புவிப்பொறியியலைப் பயன்படுத்துவது மனித உரிமைகளை அனுபவிப்பதை மேம்படுத்தக்கூடும். மறுபுறம், SRM மூலம் பூமியின் காலநிலையைக் கையாளுவது, மனித உரிமைகளுக்கு மேலும் அச்சுறுத்தலாக அமையும் எதிர்பாராத, கட்டுப்பாடற்ற விளைவுகளுக்கு வலிகோலக்கூடும். அந்த வகையில், சூரிய புவிப்பொறியியல் போன்ற காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் தவறுவது மனித உரிமைகளைப் பாதுகாக்கத் தவறியதாகக் கருதப்படலாம்.

சூரியப் புவிப்பொறியியல் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படவோ, அல்லது அது மனித உரிமைகள் அமைப்புகளின் எந்தவொரு வழிகாட்டல் அல்லது குறிப்பு ஆவணங்களின் வெளிப்படையான தலைப்பாக அமையவோ இல்லை. இருப்பினும், சூரியப் புவிப்பொறியியல் செயற்பாடுகள் மனித உரிமைகளை மதிப்பதையும் மேம்படுத்துவதையும் உறுதிப்படுத்த மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் அரசாங்கங்களுக்கு எப்போதும் கடப்பாடு உள்ளது. மேலும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் மனித உரிமைகளால் வழிகாட்டப்பட வேண்டும் என்பதை பாரிஸ் ஒப்பந்தம் அங்கீகரித்துள்ளது. இந்த விழுமியங்களை நிலைநிறுத்தாமல், SRM செயற்பாடுகள் (ஆய்வு மற்றும் செயற்படுத்தல்) பரிசீலிக்கப்படுவதோ அல்லது சாத்தியமான முறையில் முன்னோக்கி நகர்வதோ உரிய சட்டபூர்வமான தன்மையைக் கொண்டிருக்க.மாட்டாது.

